Q25 : 417
NLB.
223223

OFFICE OF THE REGISTRAR
2 - AUG 1916
MADRAS

முருகன் துணை.

பாதாங்கி மாதகரி

ஸ்ரீ விஷ்வநாதேஸ்வரர்
விசாலாக்ஷியம்மன்
பதிகம்.

சென்னை
தமிழ் பண்டிட் & சத்கதா பிரசங்கி
ச. சு. சங்கரலிங்க நாடார்
எழுதியது.

ஷை பாதாங்கி மாநகர்
எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்
மகா-ள-ள-ஸ்ரீ
கு. முத்துசாமி வுடையார் அவர்களால்

விருதுபட்டி ஸ்ரீமான்,
இராமலிங்கக்குருக்க ளவர்கள,
[illegible]கானந்த அச்சியந்திரசாலையிற்
[illegible]ப்பிக்கப் பெற்றது.
1916.

[illegible] [illegible] ஆறு.

223223

425


ஓ

முருகன் துணை.

பாதாங்கி மாநகர்,

ஸ்ரீ விஸ்வநாதேஸ்வரர்
விசாலாக்ஷியம்மன்

பதிகம்.




சென்னை

தமிழ் பண்டிட் & சத்கதா பிரசங்கி

ச. சு. சங்கரலிங்க நாடாரீ

எழுதியது.




ஷெட்யூர்

டிரெய்னிங் ஸ்கூல் உபாத்தியாயர்

மகா-ள-ள-ஸ்ரீ

கு. முத்துசாமி வடையார் அவர்களால்



விருதுபட்டி ஸ்ரீமான்,

இராமலிங்கக்குருக்க ளவர்கள து

சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப் பெற்றது.

1916

சாற்றுக் கவிகள்.

பாதாங்கி, உபாத்தியாயர், மகா-ரா-ரா-ஸ்ரீ

கு. முத்துசாமி வுடையாரவர்கள் எழுதியது.

ஆசிரிய விருத்தம்.

சுரும்பறு மலர்ச்சோலை சூழ்ந்துவான் மேய்ந்தொளிர்த்
தய்யபா தாங்கி நகரில்
சோதிமய மாகிவளர் விஸ்வநா தேஸ்வர்
தணைகஞ்ச மலர் டிக்கும்
இரும்புவி யெலாமீன்ற வெழில்விசா லாக்ஷியுமை
பிருபாத மலர்த னக்கும்
இயற்றமிழ் தோத்திரப் பதிகபா மாலை
யியற்றிநி னென்னகரினும்
பெரும்பதி யெனுஞ்செண்னை நகரிரா யப்புரம்
பிறங்குசுப் பையபூ பன்
பெருந்தவ முதித்தவன் சத்தகாபிரசங்கி
பேர்பெற்ற பெரிய குறவோன்
தருமம்பெற்றி யுடையவன் சமரபுரி வேலவன்
றன்னடியை மறவா தவன்
சந்ததமு மெந்தனுக் கினியநட் பானவன்
சங்கர லிங்க வேளே.

விருதுபட்டி, மகா-ரா-ரா-ஸ்ரீ

பூ. மு. நாச்சியப்ப நாடார் எழுதியது.

?ர்கொண்ட செங்காலன்னம் பெடையொடு சிரித்து லாவும்
வர்கொண்ட மலர்ப் பொய்கை வினியசெங் கரும்பு செந்நெல்
ரீர்கொண்ட பழனஞ் சூழும் நெடும்புகழ் திருப்பா தாங்கி
ஊர்கொண்ட விஸ்வ நாதருடன் விசா லாக்ஷி யம்மன்

திருப்பாத மலர்மீ தின்பாய் செந்தமிழ் மாலை சாத்திப்
இருப்பாரம் வியக்கச் சொற்றுன் ஈராறு கோளன் கந்தன்
இருப்பாதந் தஞ்சிப்போன் செண்ணை யிராயமா புரத்தோன் கவி
பெருக்காகப் பயின்றேன் சங்கர லிங்கநற் பெற்றி யோனே.

223223

Q25.417
M.L.

உடுமலை, சரபம், ஸ்ரீமான்,
முத்துசாமிகவிராயரவர்கள் மாணவர்
அருப்புக்கோட்டை வித்வான்,
சூ. ஆ. முத்து நாடார் எழுதியது.

அறுசீரியல் விருத்தம்.

புத்திதரு முத்திதரும் புத்திரவுற் பத்திதரும்
புகழுண் டாகும்
மித்தைதரு மேன்மைதரும் வேலவணைக் கண்டுதொழு
கிவேகங் கூடும்
பத்திதரும் பாடல்தரும் பாவலர்க்கு ஞயர்வெய்தும்
பாவம் நீங்கும்
இத்திதருஞ் சென்னைநகர்ச் சங்கரலிங்கன் றமிழைச்
செப்பு வோர்க்கே.

விருதுபட்டி ஸ்ரீமான்,
இராமலிங்கக்குருக்கள் அவர்கள் எழுதியது.

பாதாங்கி நகர்விசுவ நாதர்விசா லாட்சி யம்மை
பதமீ தன்பாய்
தாதார்ந்த பொழில்புடைசூழ் சென்னைநகர்ச் சங்கரலிங்
கேந்திரன் சாற்றும்
போதார்ந்தப் பகிகமதைப் புலவரெலாஞ் செவிவழியுண்
டுளம் பூரித்து
வேதாந்த நிலையுணர்ந்தா ரென்னிதென் பெருமைதனை
விளம்பற் பாற்றே.

இந்நூலாசிரியர் மாணவன்,
பாலகவி, கே. நாராயணன் எழுதியது.

விருத்தம்.

திருமா முருகன் திருவடியைத் தினமே மறவோன்
நிஜகவி தனிற்
குருவா யெனக்கு யெழுந் தருளிக் குறைதீர் தமிழைக்
கொடுத்த வள்ளல்

பெருமா புவியிற் பெயர் கமழும் பெரியோன் சங்கர
லிங்க மெங்கோன்
தருமா பதிக மிதைப்படித்தோர் தமிழ்மா
தருளைத் தாங்குவரே.

வேறு.

புத்திவரும் வித்தைவரும் பொன்மாதி னருள்பெருகும்
புவியில் ஞரணச்
சித்திதரும் பத்திதரும் செந்தமிழின் புலவர்களின்
சினேகஞ் சேரும்
அந்திமுகற் கிளையவனை னருள்மிகுத்த வெனதுகுரு
அவனி வாழ்த்துஞ்
சுத்தகுணச் சங்கரலிங்கம் புகன்றபதிக மிதைச்
சொல்லு வோர்க்கே.

ஈற்பயன்.

விருத்தம்.

செந்தமிழ் நிறைந்த மதுரைமா நகரைத்
திருமுடி தரித்த சாண்ட
சந்திர குலத்துப் பாண்டியர் மாபன்
சரவண பவகுக னடிமை
சந்தமா ருலகம் புகழ்தமிழ் வாணன்
சங்கர லிங்கவேள் புகன்ற
வின்னதேர் பதிக மிதைப்படித் தோர்கள்
மேன்மையாய் வாழ்குவர் மாதோ.





முருகன் துணை:

பாதாரங்கி மாநகர்
ஸ்ரீ விஸ்வநாதேஸ்வரர்
பதிகம்.

விநாயகர் துதி

கட்டளைக் கலித்துறை.

ஓராணைக் கன்றை யுமையாள் மகனை யொருகனிக்காய்
ஓராணைத் தோலை யுரித்தானை மாவல மூற்றவனை
ஓராணைக் சுன்று வுரிர்கொடுத் தோன்மக லோடிழை
ஓராணை யாய்வனந் தலிலுதித் தோனையிங் கோதுதுமே.


நூல்.

ஆசிரிய விருத்தம்.

சீர்மேவு மதிபுனை யு முடியினிற் கங்கையுஞ்
செய்யகா திற்குண் டலத்
திசையுங் காத்திலகு மழுமானு மிருவினைத்
தீர்த்த வெண்ணீ றணிந்த
தார்மேவு மேனியுஞ் சத்தியிட பாகமுந்,
தனையனென் கண்க ளிக்க
சதுர்மறைகள் புகழும்வெண் விடையமருது கேறியென்
தமிழுக் கிரங்கி வருவாய்
கார்மேவு காகினியெ லாம்வாழ்த்து மையனே
கயிலா ஜலக் கடவுளே
கண்கள்மூன் றுடையபர தண்கடம் பணிகுமர
கந்தனைப் பெற்ற தந்தாய்
தேர்மேவு சாலையு நீர்மேவு வாவியுஞ்
சேர்ந்த பாதாரங்கி நகரில்
திருக்கோயில் கொண்டெளர் விஸ்வநா தீஸ்வரத்
தெய்வமே சைல சிவமே.

அருவாகி உருவாகி அலையாகி கலையாகி
அண்டமாண்ட பங்களாகி
ஆணாகி பெண்ணாகி மானாகி தானாகி
ஆத்மகோடிகளுமாகி
மருவாகி மணமாகி பெருவாரி தியுமாகி
மாறுபடவர்த்தனர்களாகி
மதியாகி நதியாகி சதியாகி பதியாகி
மண்ணாகி விண்ணாகி நற்
கருவாகி தருவாகி மழையாகி தழையாகி
கனகபூ ஷணமுமாகி
காலாகி மானாகி மீனாகி நிற்குமுக்
கண்ணனே கயிலை வாழ்வே
திருமாது நடனமிட கலைமாது பாடச்
சிறந்த பாதாங்கி நகரில்
திருக்கோயில் கொண்டவளர் விஸ்வநாத ஈஸ்வரத்
தெய்வமே சைவ சிவமே. 5

அன்பரித யத்தமரு ஞானந்த நாதனீ
ஆதிமா லய னுத்ரனீ
அயிலேந்து கையனீ அத்திமா முகனுனீ
அண்டராசு ரேசர்களுனீ
தன்னிக ரிலாபரம தானுனீ சதுர்மறைகள்
சாற்றித் துதிப்ப வனுனீ
ஜயவிஜய காண்மப னுக்குதவி நீகடல்
விடமுண்ட தற்பர னுனீ
வன்பிணி தனக்குரிய வழூர்தம்மீ மான்தோ
ஓடன்வரவ மணிப வனுனீ
வையகமெ லாம்போற்று மையனீ வைகைநதி
மண்சுமை எடுத்த வனுனீ
தென்பொதிகை முனிபணியுந் தேவனீ மலிவளம்
சிறந்த பாதாங்கி நகரில்
திருக்கோயில் கொண்டவளர் விஸ்வநாத ஈஸ்வரத்
தெய்வமே சைவ சிவமே 6



சங்கரி திகம்பரி சிதம்பரி பரம்பரி
தயாபரி தருணி மித்ரி
சத்தியபி ராமிசிவ காமிசாம் பவி
ஜகத் ரகூஹி பைரவி
பொன்குமகி டாரூர சம்மாரி வேதப்
புராதனி யிய புத்ரி
புள்ளூர்தி தங்கைசிவ கல்கைவடி வுடைசீவி
பூதவா களி யம்பிகா
சிங்கமூது கேறிவரு மங்கையொடு நின்றுடல்
செய்தசின் மய தேவனே
தேடிமா லயனிருவர் காணிடாச் செங்கமல
பாதனே சேய நீக்கார்
திங்களுல வத்தென்றல் தங்கிநின் றூர்ப்பச்
சிறந்த பாதாக்கி நகரில்
திருக்கோயில் கொண்டுவளர் விஸ்வநா தீஸ்வரத்
தெய்வமே சைவ சிவமே.

வானுடர் துயர்தீர வடிவேல வனையிளைய
வத்ஸல கப் பயின்றாய்
வள்ளுமலர் பாணந் தொடுத்தவே ளுடலெரிய
வளர்ததற் கண் திறந்தாய்
மானுட மழுவாட மதியாட நதியாட
மங்கைசங் கரியு மாட
மாசற்ற தில்லையில் நடமாடி யடியவர்
மனதைக் களிக்க வைத்தாய்
ஞானமு முன்சேயன் பாயிபித் தமிழ்மற்று
நற்புகழ் பெறச்செய் தாளாய்
கஞ்சுண்ட கண்டனே கஞ்சமலர் தாளனே
ஞானவே தாந்த நிதியே
தேனூரு மாமலர்கள் சோலைக ளிலங்கச்
சிறந்த பாதாக்கி நகரில்
திருக்கோயில் கொண்டுவளர் விஸ்வநா தீஸ்வரத்
தெய்வமே சைவ சிவமே.

பாட்டுக் கிரங்கியொரு பக்கருக் காய்தூது
பரவைபாற் செல்ல விலியோ
பாமெடி யார்க்குனது வீடுதவி பின்வேண
பரிக்கியக் தருக விலியோ
பாட்டெழுகி யும்நின்து பக்தரடி போற்றியும்
பரமநின் கோயி லணுகிப்
பாடியும் யெனதுருறை யோதியும் பாலனெனை
பாராமல் நீ யிருக்தல்
காட்டுக்குள் வேறு ரெனக்குதவி யுனையன்றி
நானிலமெ லாங் துதிக்கும்
காகவா பரணனே லோகநா யகவேத
நாதாந்த மோன நிதா
திட்டமுறை யனுதினங் கேட்டுமன மிழ்பவர்
சேர்ந்த பாதாங்கி நகரில்
திருக்கோயில் கொண்டுவளர் விஸ்வநா தேஸ்வரத்
தெய்வமே சைவ சிவமே. 6

கந்தமி லங்குசெ ரங்களொடு நின்றுத்
துலங்குநவ மணிமே டையுஞ்
சுற்றிலும் பூங்காவ னச்சோலை யும்மிக்க
சொர்ணமய மாளிகை களுஞ்
சந்திரனுந் தன்னுலகி தென்றெண்ணித் தங்கத்
தணிந்தபொற் படி வாயிற்
தருமஞ்செய் யிடமுநற் சத்திரஞ் சத்தரா
சைலப்ர சஞ்ச மடமும்
சிந்தைமிகு சந்தனமு ரங்களாற் சாலையும்
வேதியர்கள் வாழ்வி தியும்
சிரதமிகு பக்தரா கரவென்னு மொலியும்
விளங்குபல சீர்தி றைந்து
செந்திருவே டைந்தருச் சந்ததமு மோங்கச்
சிறந்த பாதாங்கி நகரில்
திருக்கோயில் கொண்டுவளர் விஸ்வநா தேஸ்வரத்
தெய்வமே சைவ சிவமே. 7

ஆதாரசிவானந்த அமுர்தப்பா வாகமே
அனலெழு நகைத்த தவமே
ஐந்தெழுத் தானமுத லேம்னென் மணியம்மை
யகமகிழ்ந் திடு மண்ணலே
கரபுரியி னிற்றிகழு முருகனுரு ஞானக்
கரும்பே கருத்துள் ராகியுங்
கருணாக ரக்கடவுளே யெனது செந்தமிழ்க்
கனியே கனிக்குள் வித்தே
பரமசிவ மேபால னெனதுகுறை நீக்கியுன்
பாமவழு தைத் தருகுவாய்
பாரதப் போர்மூடிய வீரவிஜ யன்ரதப்
பரியோட்டு வோன் பணிபவா
திரமறிய கரியரிகள் நின்றுவிளை யாடச்
சிறந்த பாதாங்கி நகரில்
திருக்கோயில் கொண்டுவளர் விஸ்வநா தீஸ்வரத்
தெய்வமே சைவ சிவமே.

கனகபணி யின்றிக் கரித்தோல் தரித்திடுங்
கள்ளனென் றேசி னேனே
காடே திரிந்தலையு மாடேரி என்றனே
கையிற்க பால மேந்தி
தனவாள ரில்லங் களிற்சென்று சோறுண்ட
சன்யாசி நீ என்றனே
தலைதனிற் பெண்சுமந் தலைகுவா யென்றனே
சகலா கமத் தலைவனே
ஜனகமா முனிவருக் கருள்தந்த தற்பரா
சச்சிதா னந்த முதலே.
தாயன்னை நீயென்னுஞ் சேயனென் றுயர்கெடத்
தருணமீ தருள் செய்குவாய்
தினகரன் முதற்றேவ ராதியர்கள் வாழ்த்தச்
செழித்தபா தாங்கி நகரில்
திருக்கோயில் கொண்டுவளர் விஸ்வநா தீஸ்வரத்
தெய்வமே சைவ சிவமே.

எல்லாமு நினதுசெய லென்றெண்ணி யின்னமு
மிடுகின்ற மூறையொன்று கேள்
இப்புவியி னுனதருளி னல்செப்பு மெனதுதமிழ்
ஈடேற வேண்டு மின்னங்
கல்லாத புல்லருற வைத்தள்ள வேண்டுமின்
கன்னியர் மயக்க மென்னுங்
காதலைக் கருதிடாச் சிந்தைவே ண்டுமுனது
கருணை கடாக்ஷம் வேண்டும்
நல்லானெ னப்புகலு மூனதுபுகழ் பாடவும்
நாடுவோர்க் குற்ற தர்மம்
நான்புரிய நிதிவேண்டும் நானிலத் துள்ளவரை
நலியிலா வாழ்வு வேண்டுஞ்
செல்லாத வின்னுலகு சென்றுபயிர் நிற்கச்
சிறந்தபா தாங்கி நகரில்
திருக்கோயில் கொண்டுவளர் விஸ்வநா தேஸ்வரத்
தெய்வமே சைவ சிவமே. 10

விஸ்வநா தேஸ்வரர்,

பதிகம் பத்து,

முற்றிற்று:



முருகன் துணை.

ஸ்ரீ விசாலாக்ஷி யம்மன் பதிகம்.

விநாயகர் துதி.

கலிவிருத்தம்.

சத்தி கௌரி ஜடாதரி சாம்பவி
சுத்தி னேர்க்கரு ணல்குமெ னம்மைமேல்
பத்தி யாய்ப்பதி கஞ்சொல பார்புகழ்
அத்தி மாமுகத் தண்ணலே வாழ்த்துவாம்.

பதிகம்.

ஆசிரிய விருத்தம்.

மங்களந் தங்குமலே மங்கைசிவ கங்கையென
மானில மெலாந் துதிக்கும்
மணிமகுட சிங்காரி யணிகடக கங்கண
மிலங்குமா தங்கி கௌரி
அங்கமிக நொந்தடியர் சங்கையரு வேளைகண்
டாதரித் திடும் ருத்ரி
அந்தரி நிரந்தரி துரந்தரி புரந்தரி
அரோகரி கருணை மித்ரி
செங்கமல மங்கைபுகழ் தங்கழை வடைநீலி
திரிபுரசுந் தரி சங்கரி
சிற்பரி தற்பரி அற்புத கயாபரி
சேயனென் றணை யாதரி
இங்கள்தின சரனிருவர் தக்கியுல வுஞ்சித்த
சிர்கொள்பா தாங்கி சுகர்வாழ்
ஜெயவிஜய மீனாக்ஷி யழகுபொலி காமாக்ஷி
சிவன் மகிழ் விசாலாக்ஷியே.

பத்தமது செய்தமகி டாகுனை கொன்றுயிப்
பாரெலாம் நின்ற வளும்நீ
பாகிமதி சூடியுட லிற்பாதி யானநீ
பாண்டியகு மாரியும் நீ
தக்திமுக சரவணப வானந்த னன்னீ
சதுர்வேத மானவளும் நீ
சத்திவடி வாயிலகு முத்தமி நீபலச்
சித்திதக் தருள் செல்வியீ
வந்தனைசெய் பன்பரிடர் தனைமாற்று பவளும்நீ
வையமுண் போன் தங்கைநீ
வையகந் தனையின்ற மெய்த்தெய்வம் நீனது
வாழ்வும்நீ தாழ்வும் நீளன்
சிந்தையின் துயர்கெடச் செய்குவாய் தருணமிது
சீர்கொள்பா தாங்கி நகர்வாழ்
ஜெயவிஜய மீனாகி யழகுபொலி காமாகூஷி
சிவன் மகிழ் விசாலாகூஷியே. 2

பூரணி பூராதரி நீராதரி சீதரி
புவமூன் றெரித்த கௌரி
பொங்குசெந் தாமரைக் கமலநேத்ரி வெற்றி
மகுடம் புனைந்த விமலி
தாரணிக் தோங்குதிரு காரணி ஆரணி
தனையனெனை யாள் நீரணி
சற்குணி நிற்குணி மெய்க்குணி சிவசைவ
சமயத்து ளார் சத்திநீ
வாரணிக் திலகுமா லினிசூழ் சண்டிகை
வரமருள் பவானி விமலி
வனசிங்க வாகனி சாம்பவி பாம்பணி
வராகிபார் வதி யம்பிகை
சீரணிக்தெ மிமய புத்திரிமலர் வாவிகள்
சேர்த்தபா தாங்கி நகர்வாழ்
ஜெயவிஜய மீனாகி யழகுபொலி காமாகூஷி
சிவன் மகிழ் விசாலாகூஷியே. 3

பூதப் பிசாசுபேய் பில்லிசூ னியம்வைப்பு
பொல்லாத மாரக மெலாம்
போற்றியுன் பேர்சொலக் காற்றுப் பறக்குமே
பொன்மாதி னிருள் கிட்டுமே
வாதுற்ற பகைவர்கள் தினேதித்து வருவரே
வாழ்வு பல பெற்றுய்வரே
வாலைமர கதவல்லி மீனலோ சனியுனது
வளர்திருப் புக ழுரைத்தேர்
கோதிலா யெனதுகுறை நீக்கியுன் திருவருட்
கொடையைக் கொடித் தாளுவாய்
சுமரிபஞ் சாக்ஷரி யமரியஷ் டாக்ஷரி
குஞ்சர முகத்தி னோடு
சீதசந் திரபாத மயில்வாக னன்றிகழ்ச்
சீர்கொள்பா தாங்கி நகர்வாழ்
ஜெயவிஜய மீனாக்ஷி யழகுபொலி காமாக்ஷி
சிவன் மகிழ் விசாலாக்ஷியே. 4

அலரிமுக வதனத்தில் நத்துமூக் குத்தியும்
அலங்கார நெற்றி சுட்டி
ஆரமுடன் சந்திரபிறை சூர்யபிறை முகஜம்மல்
அஸ்த கடகத்தி னழகும்
பலகிரண செஞ்சுடர்ப் பிரகாசமாய் சரப்
பளியும் பதக்கங் களும்
பளபளன வொளிவீச பண்பாய் கரத்தினில்
பச்சிளங் கிள்ளை யழகும்
கலகலென பாதச் சிலம்பி னழகும்விரற்
காலாழி மீலி யழகும்
கண்ணைப் பகட்டிடுங் கலையினழ கும்மேனி
கதிர் பசுமை யழகுபூண்டு
சிலவளம் மலைவளங் கலைவளம் ஜலவளஞ்
சேர்ந்தபா தாங்கி நகர்வாழ்
ஜெயவிஜய மீனாக்ஷி யழகுபொலி காமாக்ஷி
சிவன் மகிழ் விசாலாக்ஷியே. 5

மாரிமதி டாசூர சம்மாரி மாதவர்
மனத்துய சொழித்த மருளி
மதுரைநகர் செல்வியென் மனதிலமர் கல்விமான்
மழுவேந் திடும் அம்மணி
வீரிமுக் கண்ணிவோங் காரிஆ காரிவின்
விதுவரவ மணி யம்பிகா
வேதந் தொழும்நினது பாதந்தொழும் எனது
விணையகல கருணை புரிவாய்
சூரிசந் தரிசித்ய சுமங்கலி சததளத்
துய்யவெண் ணைடை புனையுஞ்
சுத்தநிற் குணவேணி சித்திதந் தருள்வாணி
சுருதி புகழ் கல்யாணியே
சீரிலுயர் தென்பொதிகை மூனிபனி கிருபாகரி
செய்யபா தாங்கி நகர்வாழ்
ஜெயவிஜய மீனாக்ஷி யழகுபொலி காமாக்ஷி
சிவன் மகிழ் விசாலாக்ஷியே.

தாய்நீ யிருக்கசேய் நானேங்கி வாடுவது
தகுதியோ யிது தர்மமோ
தணியர்தம் பிழைதனை யணைபொருத் தாதரித்
தெடுத்தி தவ ருற்றதோ
மாய்கையாம் பிரபஞ்ச வாழ்க்கைகள் லாம்மினது
மகிமைஎன் றறியா மலே
மாயிவஞ் சனைசெயுந் தியர்போல் நான்யார்க்கு
மாசது புரிந்த திலையே
சேய்நின்னும் செம்பவள வாயனின் றங்கையே
விடபமுது கமர் மங்கையே
வேண்டினே னிதுசமயம் ஆண்டருள் புரிகுவாய்
வேதமா தான வீமலி
தேய்மதிக் குடையன்ரதி மாதுடன் வுலவச்
சிறந்தபா தாங்கி நகர்வாழ்
ஜெயவிஜய மீனாக்ஷி யழகுபொலி காமாக்ஷி
சிவன் மகிழ் விசாலாக்ஷியே.

திகம்பரி சிதம்பரி பரம்பரி சிவாகமத்
தேவி பர்வத வர்த்தினி
சிங்கவா கனிசத்தி ஸ்ரீங்காரி ரீங்காரி
தெய்வாம் பிகா பைரவி
தகுந்தத்த தாவெனத் தாளமே ளங்கூட
தற்பரனே டாடல் புரியுஞ்
சர்வாதி காரியென் டோளிருந் தணிகைமலை
ஷண்முகனை ஈன்ற வுமையே
யுகந்தழைய யீரைந் துருக்கொண்டி வுலகினி
லுயர்ந்த மாயன் தங்கையே
உம்பாசு ரேசர்தொழு மம்புவிக் கமுர்தமே
வோங்கு ஞானத் தீபமே
ஜெகந்துதிப் புலவர்கள் தினந்துதித் திடுவளஞ்
சேர்ந்தபா தாங்கி நகர்வாழ்
ஜெயவிஜய மீனாக்ஷி யழகுபொலி காமாக்ஷி
சிவன் மகிழ் விசாலாக்ஷியே. 8

கல்லாகி னும்யெனது சொல்லுக் கிரங்குமே
கருணை கரியுன்மனங்
கறையாப் பெரும்பாறை யோயிரும் போவன்றி
கனக மா மேருதானோ
பொல்லாத புல்லர்யா ராகிலு மெந்தன்மேற்
போல்லாங்கு சொன்ன துண்டோ
பூமிபுகழ் வாமிகுற மாமியபி ராமியுன்
புகழைப் புகன்ற பேர்கள்
வல்லோர்க ளென்றிந்த வையகம் பேசுதே
வனுதின முனைத் துதிக்கும்
வத்யனென் றுயர்தீர வந்தருட் புரிகுவாய்
வகிலாண்ட வல்லி யுமையே
திக்கெவ காமிபா செல்வர் தழைந்திடுஞ்
சீர்கொள்பா தாங்கி நகர்வாழ்
ஜெயவிஜய மீனாக்ஷி யழகுபொலி காமாக்ஷி
சிவன் மகிழ் விசாலாக்ஷியே. 9

கதியுண்டு நிதியுண்டு மதியுண்டு பதியுண்டு
காசினியெ லாம் போற்றிடுங்
கனமுண்டு மனமுண்டு யினமுண்டு நாளுங்
கல்லாத சிந்தை யுண்டு
சதிருண்டு புகழுண்டு மகிழுண்டு சுகமுண்டு
தவமேன்மை தானு முண்டு
தயையுண்டு நெரியுண்டு விரதாதி வைபச்
சற்குண னந்த முண்டு
நதிகொண்டு சடைதனிற் குதிகொண்ட பதமுண்டு
ஞானநன் மார்க்க முண்டு
நலமுண்டு பலமுண்டு வளர்சிங்க முதுகேரும்
நாரணி யுனைத் துதித்தால்
திதிகொண்ட வானுலகு சென்றுபயிர் நிற்கச்
சிறந்தபா தாங்கி நகர்வாழ்
ஜெயவிஜய மீனாக்ஷி யழகுபொலி சுகமாகூடி
சிவன் மகிழ் விசாலாக்ஷியே. 10

வாழ்த்து.

விருத்தம்.

அக்கிமா முகனும் வாழ்க ஆரணம் நான்கும் வாழ்க
சித்திசேர் பதிகம் வாழ்க சிவனுமை தேவர் வாழ்க
நற்றவர் புகழ்பா தாங்கி நகரமும் வாழ்க கல்வி
கற்றவர் [illegible] காவலன் வாழ்க மாதோ.

ஸ்ரீ விசாலாக்ஷியம்மன்
பதிகம்:
முற்றிற்று.

அநுபந்தம்

ஸ்ரீ சிவசுப்ரமண்யர்வ்ஸ் தோத்திரப்

பாடல்கள்.

(பாதிராத்திரி வேளையில்) என்ற மெட்டு.

சீர்பெருந்திரு வேரகத்துரை
தேவனே யுமைபாலா தேடுந்
தேவர்கட் கனுகூலா வள்ளி
தெய்வயா னைதன்லோலா தினஞ்
சிந்தனை செய்யு மைந்தர் தீவினை
தீர்த்தருள் வடி வேலா. 1

கார்பெருந்தடங் தோளனேசிவ
ஷண்முகா குருநாதா மலை
தங்கிவாழ் மலர்ப்பாதா பிர
தாபனே சுகபோதா கந்த
சாமியே யிந்த பூமி போற்றிடுந்
தற்பரா குழைக்காதா. 2

ஞானதேசிக நாயகாஜெய
நாக வேகமயூரா திரு
நான்மறை தொழும்வீரா குற
நங்கையாள் மகிழ்மாரா சுக
நாரணன் பரி பூரணன் தினம்
நாடு முத்துக்குமாரா 3

தானவர்க்குல காலனேதமிழ்த்
தங்கவே யருள்கோனே நின்
தனையன் நான்றுயர்தானே கொளத்
தர்மமோ கனவானே தாசன்
சங்கரஷ்கன் பங்கிலே தினந்
தங்கிவாழ் முருகோனே. 4

வேறு.

(பூமிபோற்றிடு மண்ணுமலைக் கோர்துணை) என்ற மெட்டு.

தேசுலாவுஞ் ஜெகதீசனை முருகேசனே
அன்பர்நேசனே பிரகாசனே மறை
தேடுஞ் சந்தமிசை பாடுஞ்செந்திநகர் வாசனே.

மோசமேபுரியும் வேசைமாதர்மையல் மூடியே
மீனதேடியே பணங்கொடியே தந்து
மோகப் பேய்பிடித்த தாசத்தாலே திரிந்தோடியே.

நாசமாகும்வுல காசைகொண்டுபல நாளுமே
பழிகோளுமே சொல்லி மேலுமே
அதில் நாடிடாமலுன்னி பாடக்கிருபை கொடுத்தாளுமே.

மாதிலாதகயிலாச வாசன்மகிழ் பாலனே
சிவசிலனே வடிவேலனே திரு
மங்களாகரனே சங்கர லிங்கன் தயாளனே.

வேறு.

(தொந்தி சரியமயிரே வெளிநகை) என்ற திருப்புகழ் மெட்டு

மஞ்சள் தடவு முகமா மதிலிலகு
கண்கள் சுழல தெருவா யலில்பொழுது
மங்கு சமய மயில்போ லழகொழுக நகையாடி

மங்க முலவு மலிதேர் முலையவரு
இன்ற வினைஞர் மனமே யுருககொடு
மகறி நிகர் குணமதே யுடையவெறில் மடமாதர்

வஞ்ச மூடைய நடையே யுடையவர்கள்
சொந்த மெனப லரையே கருதுபவர்
வம்பு பெரும வர்கள்மா மயலில்இன முழலாமல்

வண்டி படரு மலர்தா ரணியுனது
தண்டை சரண பதமே பணியவெதிர்
வந்து மயிலின் மிசையே கருணையருள் தருவாயே

தஞ்ச மிதச மயமே வருகவென
அன்று மடவில் துதியே செயுமொர்கரீ
தம்மு னணுகி துயரே யழியவருள் மலர்மாயன்.

தந்த மகளின் கணவா வமரர்சிறை
கொண்ட வசுரர் பகைவா விஜயஜய
சந்த முலவு குமரா கணபதியி னினையோனே

கொஞ்சு மினிய கிளியே கருணைபொளி
மிஞ்சு மாவ மணியே வருகவென
கொங்கை யமுத தவமா மலைமகளின் பெருவாழ்வே.

குன்ற மிடிய வடிவேல் வீடுமுருக
என்ற னுரிய குருவா னவபெருமை
கொண்ட குமர பழநி புரியில்வளர் குகவேளே.

அநுபந்தம்.

முற்றிற்று.

223223

பின்னறிக்கை.

(*)

புத்தக வியாபாரப் புண்ணிய சீலர்காள் !!

மேல்எழுதியபடி, பலவிதராகதாள கீதங்களைமந்தும் படிப்பதற்குப் பக்தியைத் தரக்கூடியதுமான, புத்தகங்களும், நூதன டிராமாசரித்திரங்களும், தற்காலநாகரீக நவீனகதா நாவல்களும், மற்றுந் தேவையான தமிழ்ப் புத்தகங்களும், இயற்றித் தருகின்றோம். புத்தக வியாபாரிகட்குக் கிரயத்திற்கும், தேசோபகாரத்தைக்கருதி அச்சிட்டு ஜனசகாயமாயுதவுங் கனதனவான் கட்குக் கிரயமின்றியும் எழுதித்தருகின்றோம். வேண்டுவோர் அடியிற்காணும் விலாசத்திற்கெழுதிக் கொள்ளலாம்.

விலாசம்.

ச. சு. சங்கரலிங்க நாடார்,

உபாத்தியாயர்,

ஆஞ்சநேய.

கோவிந்தசாமி நாயகர்,

தமிழ் நாடகக் கம்பெனி.

(முகாம்) புத்தூர், சித்தூர் ஜில்லா.